*மாகாண கல்விக் காரியாலயம் - சபரகமுவ வாராந்தப் பாடசாலை*

பாடம் :- வணிகச் செயற்பாடு

தரம் :- 06

வாரம் :- 4

தயாரிப்பு :-

*பண வளர்ச்சிக்கு சரியான உழைப்பு வழிகளைத் தேடுவோம்.*

_*சம்பாதிப்போம் _ மகிழ்ச்சியடைவோம் _ முன்னேறுவோம்-)*_

தனி நபர்களின் முன்னேற்றம் தொடர்பாக மேலதிக வருமான வழிகளை ஒழு ங்கமைதுக் கொள்வது மிகவும் பிரயொசனமானது. அதற்காக தமது முயற்சியாலேயே நடைமுறைப்படுத்திச் செல்லும் பல்வேறு சுய தொழில் தொடர்பாக அவதானம் செலுத்துவதன் மூலம் பல்வேறு அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

1. குடும்ப உறுப்பினர்களுக்கு ஓய்வு நேரங்களை பிரயோசனமான முறையில் செலவிடுவதற்கு , மேலதிக வருமானம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கும் ஈடுபடுத்தக் கூடிய சுயதொழில் சந்தர்ப்பங்கள் எவை?

2. அவ்வாறான சுயதொழிலில் ஈடுபடுவதன் மூலம் ஈடுபடுவதனுடாக பெற்றுக்கொள்ளக்கூடிய பல்வேறு அனுகூலங்கள் எவை?

_*நிதி நிறுவனம் ஒன்றில் வைப்புக்களை ஆரம்பித்தல்.*_

வட்டி வருமானம் ஒன்று அல்லது இலாபம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக பணத்தை ஈட்படுத்தக்கூடிய பல்வேறு வழிகள் உண்டு. அதற்காக எமக்கு எடுக்கக்கூடிய இலகுவான வழி ஒன்றாக சேமித்த பணத்தை சேமிப்புக் கணக்கு ஒன்றில் வைப்பிலிட முடியும்.

1. பணம் வைப்பிலிடக் கூடிய நிறுவனங்கள் ஐந்து தருக?

2. உமது பெற்றோர் மற்றும் நீர் அறிந்த வேறு மூத்தவர்கள் பணத்தை வைப்பிலிட்டுள்ள நிறுவனங்கள் எவை என விசாரித்து நிறுவனம் பட்டியல் ஒன்று தயாரிக்குக.